# வல்லமை தாராயோ



“நான் கனவு காணும் காவல் துறை சீர்திருத்தவாதிகளாக இருப்பர்“ என்பது காந்தியடிகளின் பொன்னான வாக்கு. மக்களும் காவல்துறையிடமிருந்து எதிர்பார்ப்பது கனிவான அணுகுமுறை, நேர்மையான நடவடிக்கை, பாரபட்சமற்ற சட்ட அமலாக்கம்.

காவல் துறையில் எதிர்நோக்கியிருக்கும் முக்கிய பிரச்சனை, மக்களின் எதிர்பார்ப்பு – காவல்துறையின் செயல்பாடுகள் – இதிலுள்ள இடைவெளி. காவல்துறையின் பணிகள் நல்ல முறையில் மக்களுக்கு சென்றடைய வேண்டும் (Delivery of services). காவல்துறையினர் எவ்வளவோ நல்ல பணிகளை செய்கின்றனர். பரபரப்பான முக்கிய வழக்குகளில் மிக சாமர்த்தியமாக விசாரணை செய்து கண்டுபிடிக்கின்றனர். பெரிய அளவிலான பாதுகாப்புப் பணிகளை அசம்பாவிதமின்றி நிறைவேற்றுகின்றனர். ஆனால், சில முறையற்ற செயல்களால் செய்த பணிகள் பரிமளிக்காமல் மறைந்து விடுகின்றன. மனு கொடுக்க வருபவரிடம் கடுமையாக நடந்து கொள்ளுதல், முறையற்ற கைது, ஒருதலைப் பட்சமான செயல்கள் காவல்துறைக்கு களங்கம் விளைவிக்கும் காளான்கள்.

சமுதாயத்தில் அமைதி நிலைநாட்டுவதிலும் கட்டுக்கோப்பாக வழிநடத்திச் செல்வதிலும் காவல்துறை பெரும்பங்கு வகிக்கிறது. காவல்துறை பணி மிகக் கடினமான பணி என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. நேரம், காலம் வரையறுக்க முடியாத வேலை. மக்கள் அமைதியாக ஓய்வெடுப்பதற்கு ஏதுவாக இரவில் ரோந்துப் பணி, பண்டிகைக் காலங்களில் மேலும் அதிகமான பாதுகாப்புப் பணி, விடுமுறை நாட்களில் ஏற்பாடு செய்யப்படும் பொது நிகழ்ச்சிகள் பந்தோபஸ்து என்று காவல்துறையின் பணிகள் முடிவின்றி தொடரும் நிலை. குடும்பத்தையும் குழந்தைகளையும் சரியாகக் கவனிக்க அவகாசமிருக்காது. பலநேரங்களில் நிறைவேற்ற வேண்டிய பணிகளும் மக்களின் வெறுப்பை சம்பாதிக்க வேண்டிய

தன்மையுடையவை. இதன் விளைவு மன அழுத்தம். அதனால் ஏற்படும் உடல் பாதிப்பு. வீரதீரச் செயல்களில் உயிர் துறந்த களப்பணியாளர்கள் பலர். சராசரி வருடா வருடம் சுமார் ஆயிரம் காவல்துறையினர் கடமையாற்றும் பொழுது உயிர் தியாகம் செய்கின்றனர். சில வருடங்களில் ராணுவத்தில் ஏற்படும் உயிர் இழப்பைவிட காவல்துறையில் உயிரிழப்பு அதிகம். இது தவிர 3,468 போலிசார் 2006ஆம் வருடம் சட்ட விரோதமான கூட்டங்களை கட்டுப்படுத்தும் பணியின்போது காயமடைந்தனர்.

திறமையாகக் கடமையாற்றியும், உயிர் தியாகம் செய்தும், ஏன் காவல்துறையினர் மக்கள் மதிப்பீட்டில் குறைந்து போகின்றனர்? ஏன் மக்களிடமிருந்து தேவையான ஒத்துழைப்பு கிடைப்பதில்லை? சர்வதேச மறைப்பின்மைக் கழகம் (Transparency International) இந்தியாவில் மக்கள் தொடர்புடைய வருவாய், போக்குவரத்து, போலிஸ், சுகாதாரம், கல்வி, தகவல் தொடர்பு, ரயில்வே போன்ற 10 துறைகளின் நடவடிக்கை பற்றி மக்கள் மதிப்பீடு என்ன என்பதை ஆய்வு செய்தது. சுகாதாரம், கல்வி போன்ற துறைகள் 25 சதவிகிதத்திற்கும் மேற்பட்ட மக்களோடு தொடர்பு கொள்கின்றன. ஆனால் காவல்துறையினருடன் 4 சதவிகித மக்கள்தான் தொடர்பு கொள்கின்றனர். ஆயினும் மக்கள் மதிப்பீட்டில் கடைநிலையில் காவல்துறை இருப்பது காவல்துறை ஆளுமையை சிந்திக்க வைக்க வேண்டும்.

காவல்துறையின் பணிகளை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். 1) அவசர நிலை செயல்பாடுகள். 2) சாதாரண சமயத்தில் நிறைவு செய்யும் பணிகள்.

அன்றாடம் செய்யக்கூடிய பணிகளில் முக்கியமாக மக்களிடம் தொடர்புடைய பணிகளாகிய மனு விசாரணை, ரோந்துப் பணி, நெரிசலை ஒழுங்குபடுத்தும் பணி பொது இடங்களில் பாதுகாப்பு போன்ற பணிகளில் மக்களோடு இணைந்து மனித நேயத்துடன் பழகி அவர்களது நன்மதிப்பைப் பெற வேண்டும். பெறப்படும் நன்மதிப்பு வைப்பு நிதிக்குச் சமமாகும். சேமித்து வைக்கப்படும் இந்த நன்மதிப்புதான் அவசர காலத்தில் மக்களது ஒத்துழைப்பு என்ற மிகப் பெரிய சக்தி காவல்துறையினருக்கு கைகொடுக்கும்.

ஆதரவான செயல்பாட்டு அணுகுமுறையைக் (Proactive) கையாண்டால் நிச்சயமாக பணித்திறன் உயரும். தென்மாவட்டங்களில் சாதி அடிப்படை நிகழ்வுகள் அதிகமாக விளைவதற்கு பல காரணங்களில் காவல்துறையின் அணுகுமுறையும் ஒன்றாகும். 1997ஆம் வருடம் தென்மாவட்டங்களில் ஒன்றான விருதுநகர் மாவட்டத்தில் பல வன்முறை சம்பவங்கள் நிகழ்ந்தன. ஆனால் ராஜபாளையம் சேத்தூர் காவல் நிலைய எல்லைக்குள் பெரிய அளவில் அசம்பாவிதமின்றி அமைதிாக இருந்ததற்கு முக்கியக் காரணம் அந்தக் காவல் நிலைய அப்போதைய ஆய்வாளர் திரு. தெய்வசிகாமணி. மக்களோடு பழகி அவர்களது நன்மதிப்பைப் பெற்றிருந்தார். பிரச்சனை எழுந்தபொழுது மக்கள் அவரோடு ஒத்துழைத்து அசம்பாவிதம் நிகழாமல் பார்த்துக் கொண்டனர். இதிலிருந்து காவல்துறையில் ஆதரவான செயலாக்கம் மூலம் மக்களது நன்மதிப்பைப் பெற முடியும் என்பது தெளிவாகிறது. எதிர்மறையான செயல்களால் (Reactive Policing) மக்களுக்கு பாதிப்புதான் அதிகம். பொது அமைதிக்கு பாதகமின்மையே காவல்துறையின் செயல்திறனுக்கு உரைகல். அமைதியான சூழ்நிலையில் (Peacetime Policing) காவல்பணி நல்ல முறையில் அமைந்தால்தான் அவசர நிலை காவல்பணியில் (Emergency Policing) மக்களின் ஒத்துழைப்பு மிகப் பெரிய பலமாகக் காவல்துறைக்கு அமையும்.

உச்ச நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி திரு கே.டி. தாமஸ் அவர்கள் நிர்வாகத்தில் ஊழலை குறைப்பதைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது, அரசுப் பணியாளர்களை மூன்று வகையாகப் பிரித்து விவரிக்கின்றார். ஒரு வகையினர் ஊழலில் ஊறியவர்கள். எந்த நிலையிலும் பணம் பண்ணுவதே குறிக்கோளாக வைத்திருப்பர். இரண்டாவது வகையினர் மதில்மேல் இருக்கும் பூனையாகச் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு தனது நிலையை மாற்றிக் கொள்வர். சபலமும் உண்டு. ஆனால் விளைவை நினைத்து பயம். தானாக வந்தால் வாங்கிக் கொள்வர். மூன்றாவது வகையினர் உண்மையாக நேர்மையாக சேவை மனப்பான்மையோடு உழைப்பவர். ஒவ்வொரு வகையினரின் எண்ணிக்கை எந்த அளவு என்பது அந்தத் துறை நிர்வாகத்தை பொறுத்தது என்றும் நேர்மையான பணியாளர்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிடுகின்றார்.

காவல்துறையிலும் களப்பணியாளர்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம். முரட்டு சுபாவாம் உடையவர்கள், இழிசொல் உபயோகிப்பவர்கள், கோபக்காரர்கள் ஒருவகை. இந்த வகையைச் சேர்ந்தவர் மனித உரிமைகளை மீறுவதற்கு அஞ்ச மாட்டார். மக்களின் சேவையைப் புறக்கணித்து தனது சுய சேவையே குறிக்கோளாகச் செயல்படுவார். மக்களின் வெறுப்பைச் சம்பாதித்து துறைக்கு அவதூறு விளைவிப்பர்.

அடுத்த வகையைச் சேர்ந்தவர் சந்தர்ப்ப சூழ்நிலைக்கு ஏற்ப தம்மை மாற்றிக் கொள்பவர். சாதகமான சூழ்நிலையில் தனக்கு பாதிப்பு வராத வகையில் ஆதாயம் தேடுபவர். இவர்களால் மக்களுக்கு நன்மையில்லை.

சேவை மனப்பான்மையோடு தன்னை பணியில் அர்ப்பணித்து நேர்மையாக ஆதரவான செயலாக்கத்துடன் செயல்படும் காவல் பணியாளர்கள் துறைக்கும் நாட்டுக்கும் நன்மதிப்பைப் பெற்றுத் தருபவர். மனித உரிமைகளுக்கு மதிப்பு கொடுப்பது, கண்ணியமாக செயலாற்றுவது, கொடுத்த பணிகளை சுயஉந்துதலோடு திறம்பட நிறைவேற்றுவது, மக்களை நேச உணர்வோடு நடத்துவது போன்ற உயர்ந்த கோட்பாடுகளைக் கொண்டவர் இவர்கள்தான் உண்மையான மேம்பட்ட போலிசார் (Super Cop). ஆரவாரமின்றி அமைதியாகவும் முழுமையாகவும் திறமையாகவம் பணிபுரியும் இத்தகை களப்பணியாளர்கள் மூலம்தான் காவல்துறை மங்காமல் ஒளிர்கின்றது. காவல்துறையில் உள்ள ஒட்டுமொத்தப் பணியாளர்களும் இத்தகைய சுய உந்துதலுடன் பணியாற்றினால் எந்த அளவிற்கு சமுதாயம் மேன்மை அடையும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இத்தகைய ‘‘சூப்பர் போலிசார்‘‘ உருவாகுவதற்கு நிர்வாகத்தில் தகுந்த சூழ்நிலை அமைப்பது காவல்துறை ஆளுமையின் முக்கிய பொறுப்பு. தவறு செய்பவர்கள்மீது உடனடி நடவடிக்கை, நேர்மையானவர்களுக்கு உரிய கௌரவம், ஊக்கம் போன்ற ஒருங்கிணைந்த நிர்வாகத்தின் மூலம்தான் இது சாத்தியமாகும்.

**1978–ல்** அமைக்கப்பட்ட தேசிய போலிஸ் கமிஷன் தனது பரிந்துரையில் கீழ்க்கண்டவாறு கூறுகின்றது. ‘‘காவல்துறையில் சிலர் செய்யும் முறையற்ற நடவடிக்கைகளையும், நேர்மையற்ற செயல்களையும் நிர்வாக ஆளுகையின் திடீர் தணிக்கை, அலுவலக பார்வையிடல், கூர்ஆய்வு மூலம் களைய

முடியும். இதற்கு அடித்தளம் சுயஉந்துதலுடன் நேர்மையாக பணிகளை நிறைவு செய்யும் திறமையான மேற்பார்வையிட வேண்டிய உயர் அதிகாரிகள். இத்தகைய உயர்தர ஆளுமை காவல்துறையின் எல்லா மட்டத்திலும் பரிமளிக்க வேண்டும்.

எல்லோருக்கும் சம நீதி, கண்ணியம் (Justice and Dignity for all) என்ற சர்வதேச மனித உரிமைகள் ஆணயத்தின் பிரகடனம் நிறைவேற்றுவதில் காவல்துறை முழுமையுடன் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும்.

‘‘வல்லமை தாராயோ – இந்த மாநிலம் பயனுற வாழ்வதற்கே‘‘ என்ற பாரதியாரின் வாக்கிற்கு ஏற்ப காவல்துறை தனது சிறந்த செயலாக்கம் மூலம் வல்லமை பெற வேண்டும். மக்கள் ஒத்துழைப்பு மூலம் பெறப்படும் இந்த வல்லமைதான் வன்மையில்லா வண்மைகள் ஓங்க வழிசெய்யும்.

*******